# எந்த இராணுவ நடவடிக்கையையும் சந்திக்க புலிகள் தயார்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 4 இதழ்: 251
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-10-1991

(யாழ்ப்பாணம்)

"எந்த இராணுவ நடவடிக்கையையும் சந்திக்க விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கிறார்கள்", இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியற் பிரிவு சார்பாக மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு நேற்று வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவம் முன்னேறும் என்று கருதும் முனைகளில் எங்கள் முழுக் கவனத்தையும்

(4ம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழிகள் அமைக்க புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிங்கள அரசின் விமானத்தாக்குதலிலிருந்தும் எறிகணைத்தாக்குதலிலிருந்தும் பாதுகாத்துக்கொள்வதற்கு பதுங்குகுழிகளை அமைக்குமாறு விடுதலைப்புலிகள் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: (4ம் பக்கம் பார்க்க)

## சித்தன்கேணி, சண்டிலிப்பாய் பகுதிகளில்

# பயங்கர விமானத் தாக்குதல்:

# மூவர் உடல் சிதறி பலி பலர் காயம்

## பல வீடுகள் முற்றாகச் சேதம்

(யாழ்ப்பாணம்)

**சித்தன்கேணி, சண்டிலிப்பாய் பகுதிகளில் நேற்றுக்காலை பொம்மர்கள் நடத்திய பயங்கர குண்டுத் தாக்குதலில் சண்டிலிப்பாயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும், மகளும் சித்தன்கேணியில் வயோதிப மாது ஒருவரும் உட்பட மூவர் உடல் சிதறி பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர், பல வீடுகள் தரை மட்டமானது.**

நேற்றுக்காலை 9-00 மணி முதல் சித்தன்கேணி, சண்டிலிப்பாய் பகுதிகளைச்சுற்றி மூன்று பொம்மர் விமானங்கள் பேரிரைச்சலுடன் வட்டமிட்டன.

வானத்தில் வட்டமிட்ட மூன்று பொம்மர்களும் மாறி மாறி ஆறு குண்டுகளை சித்தன்கேணிச்சந்திக்கு அருகாமையிலுள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள மூன்று வீடுகளை நோக்கி வீசியதில் வீட்டுக்கு உள்ளேயிருந்த திருமதி கணபதிப்பிள்ளை இரத்தினம் (80 வயது) ஸ்தலத்திலேயே உடல் சின்னாபின்னமாகி பலியானார்.

திருமதி மகேஸ்வரன் மாலாம்பிகை (வயது 60) நாகநாகரத்தினம் ராகுலன் (வயது 2), செல்வி சத்தியராணி (16 வயது), பிள்ளையார் ஆலய மண்டபத்தில் தங்கியிருந்த காங்கேசன் துறையிலிருந்து இடம்பெயர்ந்து வந்த வயோ

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நடவடிக்கை

## ஜனாதிபதியின் தந்திரம்

(லண்டன்)

தென்பகுதியில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுந்துள்ள பெரும் அரசியல் நெருக்கடியை சமாளிக்கவே வட

(4-ம் பக்கம் பார்க்க)

## தெற்கே சமாதானம்

## வடக்கே விமான தாக்குதல்

(கொழும்பு)

இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் நோக்குடன், தென்னிலங்கையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த கட்சிகளுடன் ஜனாதிபதி பிரேமதாசவும், அவருடைய நெருங்கிய வட்டாரங்களும் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்கள்.

இதேவேளை, வடபகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் அகோர குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (158

# இனப்பிரச்னை தீர்வில் புலிகள்

## தமது நிலைப்பாட்டை கூறவேண்டும்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடு என்ன என்பது பற்றி தெளிவாக தெரியப்படுத்தவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு.மாத்தயாவையும், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்த 'குவேக்கர்' சமாதானக் குழு இதனை கொழும்பில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தலைவர் திரு. பிரபாகரனே தெளிவுபடுத்தவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## சமாதானக் குழு தொண்டா சந்திப்பு

(கொழும்பு)

வடபகுதி நிலைமைகளை நேரில் அவதானித்த 'குவேக்கர்' சமாதானக்குழு அமைச்சர் தொண்டமானை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்த

(4ம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டு பிரச்னையை தீர்க்க

# அரசிடம் இறுதி முடிவு இல்லை

(கொழும்பு)

இனப்பிரச்னைக்குரிய தீர்வு யாதென்ற முடிவு இப்போது இல்லை. அரசு தரப்பிடமும் எந்தவித யோசனையுமில்லையென அமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

உறுதியான நல்லதொரு தீர்வு கிடைத்தால் சர்வகட்சி மாநாட்டிலும், தெரிவுக்குழுவிலும் ஆராய்ந்து முடிவெடுத்து மந்திரிசபையின் அங்கீகாரம் பெறப்படும்.

நாட்டுப் பிரச்னை தீர வேண்டும் அதற்கு யாரும் சமாதான முயற்சியை தொடரலாம் படையினர் தொடர்ந்தும் உயிரிழக்க அனுமதிக்க முடியாது என்றும் அமைச்சர் கூறினார். (சி)

## தடைசெய்யப்பட்ட பொருள்களை

# வடபகுதிக்கு அனுப்ப உதவிய

## முன்னாள் அமைச்சர் மீது விசாரணை

(கொழும்பு)

வடபகுதிக்கு கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்ட பொருட்களை முன்னாள் அமைச்சர் வின்சன்பெரேரா வடபகுதிக்கு கொண்டுசெல்வதற்கு உதவி புரிந்தார் என்ற தகவலைத் தொடர்ந்து மேற்படி அமைச்சர் தற்போது இரகசியப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

வடபகுதிக்கு கொண்டு செல்வதற்கு தடைவிதிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டின் பின்

# பொதுத் தேர்தல்

(கொழும்பு)

கொழும்பில் சார்க் மாநாடு நடந்த பின்னர் அரசு பொதுத் தேர்தலை நடாத்த ஆயத்தமாகவுள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போதைய யுத்த நடவடிக்கை முடிவுற்றதும் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ள அரசு தரப்பு முயலலாமென கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 153)

# வரி விளம்பரம்

### O/L பரீட்சை 90, 91

கணிதம் ஆங்கிலத்தில் உயர்ந்த பெறுபேறுகள் பெறுவதற்கு அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85 சிவன் கோவிலடி திருநெல்வேலி. (சி-5491)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள C 50 HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 31, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (லக்ஷ்மி அச்சகம் அருகாமையில்) (சி-5515)

### வாழ்த்து மடல்கள்

வந்துவிட்டன! வாழ்த்து மடல்கள்!! தித்திக்கும் தீபாவளி வாழ்த்து மடல்களை எத்திக்கும் வாங்கி அனுப்பிட இன்றே விஜயம் செய்யுங்கள்! சோபிதா, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 5453)

### கல்வி

Spoken English with Grammer உட்பட A/L வெளிநாட்டுக்கல்வி. கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களுடன் புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-5513)

G. C. E. (O L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலயத்திற்குள் விஷேட இத்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-5514)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிப் பட்டப் படிப்பு

துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவமும், 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுக நிகழ்ச்சியும் 1991-10-22ம் திகதி கைலாசபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளன. வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள், இவ்நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ளன.

முதல் அமர்வு -
முதற்கலை மாணவர்கள்-
காலை 9.00—காலை 11.00

இரண்டாவது அமர்வு-
முதல் வர்த்தக
மாணவர்கள்
காலை 11 30 — 1.00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20-10-91 வெளிவாரிப்பதிவு பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாத வெளிவாரி மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முடியாதென்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(எ-1661)

### வருடாந்த கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் சேமலாப நலன்புரி ஐக்கிய சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 26ம் திகதி சனிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. [72]

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலமுதிரோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் இம்மாதம் 26-ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது. (153)

# ஆயுர்வேத மருந்துகளை

## உள்ளூரில் தயாரிப்பது அவசியம்

(கொழும்புத்துறை)

தற்போதைய சூழ்நிலையில் கொழும்பு ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக உள்ளூரில் ஆயுர்வேத மருந்துவகைகளைத் தயாரிப்பது அவசியம்.

இவ்வாறு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது கூறினார்.

இன்றைய காலகட்டத்தில் ஆயுர்வேத மருந்துகளை எமது தேவைக்கேற்ப உள்ளூரில் உற்பத்தி செய்ய நாம் முன்வர வேண்டுமென்றும் இவ்விடயத்தில் ஆயுர்வேத வைத்தியர்கள் ஆர்வமுடன் செயல்பட்டு எமது பகுதிக்குத் தேவையான மருந்து வகைகளை மூலப் பொருட்களில் இருந்து தயாரிக்க முன்வரவேண்டுமென்று தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. வே. பாலகுமார் இக்கலந்துரையாடலில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றும் போது கூறினர்.

மாநகரசபை, பிரதேசசபை ஆயுர்வேத வைத்தியர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்கள். [154]

# வடமராட்சி அகதிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க தயக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து வேறு இடங்களில் அகதிகளாகவுள்ளோருக்கு அரச உதவி அளிப்பதில் பின்நிற்பதாக தெரியவருகிறது:

இவர்கள் அந்த ஊரிலுள்ள கோவில்களிலும், பாடசாலைகளிலும் மாத்திரம் தங்குமாறு தாங்கள் பணிக்கப்பட்டதாகவும், அவர்களை வெளியேறுமாறு கூறவில்லையென்றும் புனர்வாழ்வு அமைச்சு கூறியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவர்களுக்கு உதவிகள் வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சை வற்புறுத்திவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

### கொட்டடியில் தங்கியிருந்த

# தீவுப்பகுதி அகதிகள் யாழ். ரயில் நிலயத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடியில் தங்கிய தீவுப்பகுதி அகதிகள் யாழ். ரயில் நிலையத்தில் தஞ்சமடைந்தார்கள்.

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் தங்கி இருந்த அகதிகள், கொட்டடிப்பகுதியில் 'ஷெல்' வந்து விழுந்ததினால் யாழ். புகையிரத நிலைய அகதி முகாமில் தஞ்சமடைந்தார்கள்.

இங்கு அகதிகளின் தொகை கூடி வருவதனால் அங்குள்ள தொடர்பக அதிகாரிகள் நல்லூர் ஸ்ரீ கலைமகள் வித்தியாலயத்துக்கும், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் அகதிகளை தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். (152)

### பிரிவுபசார வைபவம்

(மருதனார்மடம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை இணை உப அதிபர் ஆ. கல்யாண சுந்தரேசன் 33 வருட சேவைக்குப் பின் இளைப்பாறியுள்ளார். அவரின் சேவையைப்பாராட்டி கல்லூரி அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் பாடசாலை ஆசிரியர் இணைந்து நடத்தும் பிரிவுபசார வைபவம் இம்மாதம் 30ம் திகதி கல்லூரியில் நடைபெறும்.

## நாலாம் வருட நினைவு



### குருசுமுத்து ஜோண்பீற்றர்

(சில்றன்)

மண்ணில்: 1964 03-15 — விண்ணில்: 1987-10-21

"எனக்கோ பிரியவேண்டிய நேரம் வந்து விட்டது. இதோ என்வாழ்க்கை பலியின் இரத்தமென வார்க்கப்படுகின்றது."

2 தீமோ 4;6

எங்கள் அன்புச் செல்வமே;

கானல் நீர்போல் நாலு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் கடமைவைத்தலைமேல் ஏற்று யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்ற நீர் எப்போது வருவீர் என சிரம்மேல் கரம் குவித்து கண்ணீர் மல்க வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றோம் ஐயா. உமது பிரிவு ஆண்டுபல சென்றாலும் எமது உள்ளங்களைவிட்டு ஒருபோதும் அகலாதையா.

நீர் இறைவன் அடியில் அடைக்கல அன்னையின் மடியில் இருந்து இறைபுகழ் பாடி வருகின்றீர் என்ற நம்பிக்கை ஒன்றுதான் எம்மை இவ்வுலகில் வாழ வைக்குதையா. நீர் எமக்காக இறைவனிடம் இரந்து கேட்கும் வேண்டுதலாகிதான் உமது பிரிவு எம்மை தேற வைக்குதையா.

உமது நீண்ட பிரிவால் உமது உறவுகள் யாவரும் இறைவனிடம் இரந்து கேட்பது உமக்கு முடிவில்லாப் பேரொளி இறைவன் சந்நிதியில் கிடைக்கவேண்டுமென்பதே,

பெற்றோர், உறவினர்.

உரும்பிராய்,
ஆனைக்கோட்டை.

(சி-5499)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் 21-10-87, 22-10-87 ஆகிய தினங்களில் தங்கள் இன்னுயிரையும் மதியாது கடமையாற்றிக் கடமையின்போது உயிர் நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
வைத்திய கலாநிதி கே. கணேசரட்ணம்
திருமதி ஆர், வடிவேலு
செல்வி முத்தையா லீலாவதி
செல்வி இராமநாதன் மங்கையற்கரசி
திரு. கே. செல்வராஜா
திரு. கே. கிருஸ்ணராஜா
திரு. வி. சண்முகலிங்கம்
திரு. க. நவரட்ணம்
திரு. ஆர், இரத்தினராசா
திரு. எம். துரைராசா
திரு. வி. வரதராசன்
திரு. கே. வேதாரணியம்
திரு. யோன் பீற்றர்
திரு. இ. சுகுமார்
திரு. கே. சிவலோகநாதன்
திரு. கோ. உருத்திரன்
திரு. எஸ். ஜெகநாதன்
திரு. கே. சிவராஜா
திரு. கே. மார்க்கண்டு

(ஏ 1664)

— வைத்தியசாலை ஊழியர்கள்

# பல்லாயிரக்கணக்கான தீவக மக்கள் யாழ்ப்பாணபகுதிமுகாம்களில்தஞ்சம்

## வீதியோரங்களிலும் பல குடும்பங்கள்

(யாழ்ப்பாணம்)
தீவுப்பகுதியில் ஆரம்பமாகியுள்ள இராணுவ நடவடிக்கையை அடுத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

வேலணை, சரவணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதி மக்களே இவ்வாறு ஆயிரக்கணக்கில் வெளியேறி யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாண பாடசாலைகளிலும் ரயில் நிலையத்திலும் தங்கியுள்ளனர்

தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாக முன்பே தீவக மக்கள் தமது பகுதிகளை விட்டு வெளியேறியதால் இராணுவ நடவடிக்கையில் பெருமளவு உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளி முதல் சனிக்கிழமை காலை வரை ஆயிரக்கணக்கானமக்கள் மண்ணைபாலம் ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்

தீவுப்பகுதி அகதிகள் தற்போது அடைக்கலமாதா ஆலயம், வேம்படி மகளிர் கல்லூரி, நல்லூர்சாதனா வித்தியாலயம் யாழ்ரயில் நிலையத்திலும்சுமார் 2 ஆயிரம்குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன.

எனினும் பல குடும்பங்கள் வீதியோரங்களிலும் கடைகள் வர்த்தகநிலையங்களுக்கு முன்பாகவும் இரவுநேரங்களில் தங்கியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. (ஓ)

## நியாயமான விலையில் விதை நெல்

[அச்சுவேலி]
புத்தூர் கமநலசேவை நிலையத்தில்விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கப்படுகின்றது.

காலபோக நெற்செய்கை ஆரம்பமாகி இருப்பதால் பீ. ஜி 51 ரக விதைநெல் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுகின்றன,

நிலாவரையில் செயற்படும் புத்தூர் கமநலசேவை நிலையத்தில் அலுவலக நேரத்தில் விவசாயிகள் விதை நெல்லைப் பெற்றுக்கொள்ளலாம்.

## தொழில் பயிற்சிநெறி

[பண்டத்தரிப்பு]
தென்னிந்திய திருச்சபையின் யாழ் அத்தியட்ச ஆதீனத்தின் பண்டத்தரிப்பு திருச்சபை யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிநெறிகளை ஆரம்பித்துள்ளது.

தையல், பன்னவேலை, தும்புத்தொழில் மூலம் கயிறு, தும்புத்தடி தயாரித்தல் ஆகிய பயிற்சி நெறிகளை நடாத்தப் பட்டு வருகின்றது. 72)

## இராணுவ உதவியை நிறுத்த லண்டன் அமைப்பு கோரிக்கை

(லண்டன்)
இலங்கையில் வன்முறையை ஒழித்துக் கட்டுவதானால் ஆயுத உதவியையும் இராணுவ நிபுணத்துவ தொழில் நுட்ப வசதிகளையும் இலங்கைக்கு வழங்குவதை நிறுத்துமாறு லண்டனில் இயங்கும் மனித உரிமைகள் குழுவொன்று சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இலங்கையில் வன்முறை தொடர்வதற்கு சர்வதேச நாடுகளிடம் அதற்கு கிடைக்கும் கட்டுப்பாடற்ற ஆயுத விநியோகமும், இராணுவ நிபுணத்துவ தொழில் நுட்பவும் இலங்கைக்கு ஆயுத ஆலோசனைகளுமே எனவும் உதவி வழங்குவதாகவும் இந்த சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமைப்பு சுட்டிக்காட்டியுள் மேலும் பிரிட்டனும், சீனு ளது.

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்
பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

22-10-91 செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அ. தேவராசா
[ஏ 1668] [கௌரவ காரியதரிசி]

## 25,000 பனம் விதைகள் நாட்டப்பட்டன

[சாவகச்சேரி]
சாவகச்சேரியிலிருந்து தனங்கிளப்பு வரையுள்ள இரண்டரை மைல் நீளமான வீதியின் இருபக்கமும் 25 ஆயிரம் பனம் விதைகளை சாவகச்சேரி அபிமா கழகத்தினர் அண்மையில் நாட்டியுள்ளனர்.

இவ்வைபவத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பூ. சுந்தரம்பிள்ளை சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் த. நவரத்தினராசா, டாக்டர் பே. பிலிப்ஸ் டாக்டர் வ. சின்னப்பு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் அஞ்சலி

(சாவகச்சேரி)
ஆனையிறவில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை சார்ள்ஸ் (மட்டுவில் வடக்கு) இன் புகழுடல் நேற்றுமுன்தினம்மட்டுவில்கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பெருந்திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

வீரவேங்கையின் புகழுடல் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு அக்கினியுடன் சங்கமமானது.

## போத்தல்கள் தேவை

பின்வரும் விலைகளில் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

| | |
|---|---|
| ஜாம் போத்தல்கள் | ரூபா 5-00 |
| ஜாம் போத்தல்கள் (சிறியது) | ரூபா 2-50 |
| விவா, ஹோர்லிக்ஸ் (400g. மூடியுடன்) | ரூபா 5-00 |

Taste Line Industries (pvt) Ltd
ரேஸ்ட் லைன் இண்டஸ்றீஸ்
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[ஏ-1624]

## தமிழக சிறைகளில் ஜம்மு தீவிரவாதிகள்

[சென்னை]
தமிழக சிறைகளில் தற்போது ஜம்மு - காஷ்மீரில் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் பலரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளென்ற சந்தேகத்தின் பேரிலும் தமிழக சிறைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள்.

ஜம்மு தீவிரவாதிகளையும், புலிகளையும் தடுத்து வைத்துள்ள சிறைகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ)

## விவசாயிகள்

(பண்டத்தரிப்பு)
காலபோக நெல்விதைப்பில் ஈடுபட்ட வலிகாமம் மேற்கை சேர்ந்த விவசாயிகள் மழையின்மையால் கவலையடைந்துள்ளார்கள். பருவமழை பெய்யாததினால் நெற் பயிர்கள் வாடி கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. (72)

## பீரங்கித் தாக்குதல் பல வீடுகள் சேதம்

[யாழ்ப்பாணம்]
கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கடற்படைப்பீரங்கிக் கப்பலிலிருந்து கடந்த 18-ம் தேதி குடத்தனை, செம்பியன் பற்று நாகர்கோயில் பகுதிகளை நோக்கி சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட தடவை பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இத்தாக்குதல்களால் பல வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## விற்பனை நிலையம்

[பண்டத்தரிப்பு]
பண்டத்தரிப்பு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கம் சங்கத்தின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக விற்பனை நிலையம் ஒன்றை பண்டத்தரிப்பில் திறந்துளது. (72)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

அமைய
திட்ட அமுலாக்கும்
மேற்பார்வையாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தொழில் முன்னேற்ற திட்டங்களை விரிவடைய நடவடிக்கை எடுத்துள்ளது. கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை நடாத்துவதற்கான திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

அ. விவசாயம்
ஆ. நெசவு வேலை
இ. மீன்பிடி
ஈ. தோற் பொருள் உற்பத்தி
உ. தொழிற் கல்வி
ஊ. வலது குறைந்தோர்க்கான சுயதொழில்

அவ்வத்துறையில் போதிய தேர்ச்சி, அனுபவம், வலது குறைந்த ஆற்றல் பெற்றவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். ஊதியம் சிறிதாயினும் சேவை மனமுள்ளோர் விரும்பத்தக்கது. 25-10-91க்கு முன் விண்ணப்பிக்கவும். 26-10-91 முற்பகல் 9-00 மணிக்கு கிளை அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர்பட்டியல் கிளை அலுவலகத்தில் 25-10-91 (பிற்பகல் 4-00 மணிக்கு) வெளியிடப்படும்.

க. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
18-10-91. (ஏ-1667)

## கடந்த பொதுத் தேர்தலில் — ஐ.தே.க. அதிருப்தியாளருக்கு 22வீத வாக்குகள் கிடைத்தன

[கொழும்பு]
கடந்த பொதுத்தேர்தலின் போது ஐ. தே கட்சிக்கு கிடைத்த வாக்குகளில் 22.5 வீதம் தங்கள் மூவருக்கும் கிடைத்துள்ளதாக ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரன காமினி திசநாயக்கா களுத்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் லலித் அத்துலத்முதலி கூடிய விருப்பு வாக்கை பெற்றுள்ளார். அதே போல் குருநாகல் மாவட்டதில் முன்னாள் தொழில் அமைச்சர் பிரேமச்சந்திரா கூடுதலான விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார். அதே போன்று நுவரெலியா மாவட்டத்தில் கூடுதலான விருப்பு வாக்குகளை நான் பெற்றுள்ளேன். எங்கள் மூவருக்கும் கிடைத்த வாக்குகள் ஐ. தே. கட்சிக்கு மொத்தமாக கிடைத்த வாக்குகளில் 22.5 வீதம்ஆகும் என்றும் தெரிவித்தார். [153]

# ஜேர்மன் செல்வோருக்கு அரசு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜேர்மனியில் இருக்கும் ஆசிய நாட்டவர்கள் மீது புதிய நாஜிகள் கோஷ்டி தாக்குதல்களை மேற்கொள்வதினால் ஜேர்மனிக்கு பயணம் மேற்கொள்வோரை அவதானமாக இருக்குமாறு வெளியுறவு அமைச்சு அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

இப்புதிய நாஜிக் குழுவினர் அகதி முகாம்களில் தங்கியிருப்போர் மீதும் வெளியில் நடமாடும் ஆசிய நாட்டவர் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இதனால் அங்கு வாழும் கறுப்பினத்தவரிடையே குறிப்பாக இலங்கையரிடையே பெரும் பதற்றம் நிலவுகின்றது.

ஜேர்மனியில் சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் அகதி முகாம்களிலும் தனியார் விடுதிகளிலும் தங்கி வாழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் திருகோணமலை மாவட்டத் தளபதியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவருமான லெப். கேணல் சந்தோசத்தின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம், இன்று மாலை 4-00 மணியளவில் அரியாலை செல்லக்கிளி அம்மான் விடனமப்புத் திடலில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

## யுத்த நடவடிக்கை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் தற்போது பெரும் யுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த அபிப்பிராயமே தென் பகுதியில் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. தனக்கு எதிரான நடவடிக்கைகளை இதன் மூலம் திசை திருப்ப ஜனாதிபதி முயல்வதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. [153]

## சித்தன்கேணி]

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மீர் ஒருவரும் படுகாயமடைந்தார்.

மார்க்கண்டு சேயோன், க. ஹரிகரன், திருமதி குமாரசாமி மனோன்மணி ஆகியோரின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

நேற்று காலை, சண்டிலிப்பாய் வடக்கு மாகியப்பிட்டியில் மூன்று குண்டு வீச்சு விமானங்கள் மூர்க்கத்தனமான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

மாகியப்பிட்டியில் உள்ள ஒரு வீட்டில் நான்கு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஹரிகரன் [தந்தை], அருந்ததி ஹரிகரன் [மகள், 4 வயது], ஆகியோர் உடல் சிதறிப் பலியானார்கள். ஹ. அர்ஜுன் [9 வயது], ஹ. ஹம்ஸத்வேணி [10 வயது] ஆகியோர் படுகாயமடைந்து, யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அர்ஜுனின் இடது கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஒரு குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

ஹரிகரனின் வீடு முற்றாகச் சேதமடைந்ததுடன், இப்பகுதியில் ஐந்து வீடுகள் சேதமடைந்தன. ஆடு, மாடு, கோழிகள் உயிரிழந்தன. மோட்டார் சைக்கிள், சைக்கிள், லான்ட்மாஸ்டர் என்பனவும் சேதமடைந்தன.

இப்பகுதிகளில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களினால் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பதற்றம் நிலவியது. (123-139-56-152)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"போர்க்கால சூழ்நிலையில் நமது பணிகள்" தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4-00 மணிக்கு நல்லூர் வடக்கு தமிழ்த்தாய் நூலகத்தில் நடைபெறவுள்ளது.

## பதுங்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உங்கள் வீடுகளில் கல்விக் கூடங்களில், சந்தைகளில் ஆதிமுகாம்களில் தொழில் நிலையங்களில் இவைபோன்று மக்கள் கூடும் அனைத்து இடங்களிலும் திறந்த பதுங்கு குழிகளை அமையுங்கள். இத்திறந்த பதுங்கு குழிகளை ஒவ்வொன்றும் 2 அடி அகலமும் 4 அடி ஆழமும் 6 - 7 அடி நீளமும் உடையதாக அமையுங்கள். இந்த அளவுடைய திறந்த பதுங்கு குழிகளை தேவைக்கேற்ற எண்ணிக்கையில் வெட்டுங்கள்.

வான்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால் பதட்டமடைந்து சிதறி ஓடிக் கொண்டேயிராது பதுங்கு குழிகளுக்குள் செல்லுங்கள்.

குண்டு வீச்சுத்தாக்குதல்களினால் ஏற்படும் அநாவசியமான உயிரிழப்புக்களைத் தவிர்க்க முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவோம்."

# யாழ். பாதுகாப்பு வலயத்திற்குள் குடியிருக்கும் மக்கள் இடம்பெயரத் தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகருக்குள் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் குடியிருக்கும் மக்கள் எதுவித காரணம்கொண்டும் இடம்பெயரத் தேவையில்லையென சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொழும்பு உயர்மட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயரதிகாரிகள், கொழும்பு இராணுவ - அரசதரப்பினருடன் தொடர்பு கொண்டதையடுத்தே இவ் அறிவித்தல் வெளியிடப்பட்டன.

பாதுகாப்புவலயப்பிரதேசத்திற்குள் அரசபடையினர் தாக்குதல்களையும் மேற்கொள்ளமாட்டார்களென தம்மிடம் உறுதியளித்ததாகவும் தெரிவித்த அவர்கள் விமானத் தாக்குதலுக்கு மத்தியில் நகரிலும், யாழ். போதனா வைத்தியசாலையிலும் திவிரரோந்தில் ஈடுபட்டு நிலைமைகளை அவதானித்தபடியிருந்தனர்.

பிரதிநிதிகள் வாக்கிடோக்கியுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் முழுவதும் இருக்கக்காணப்பட்டனர். (152-56)

## தடைசெய்யப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கற்பூரம், கற்பூரத்தூள் அச்சடிக்கக் கூடிய பத்திரிகைகள், அச்சடிக்கப்பாவிக்கும் மை, போட்டோ பிரதிகளை எடுக்கும் தாள்கள் உட்பட வேறு பல பொருட்களை ஐந்து லொறிகளில் வவுனியா இராணுவ முகாமைக் கடந்து செல்வதற்கு உதவி புரிந்தவரென்றும், மேற்படி லொறிகளை அமைச்சர் வின்சன் பெரேரா கொழும்பிலிருந்து வவுனியாவரை தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் பின் தொடர்ந்து கடந்த மேமாதம் 25ம் திகதி வவுனியாவரை வந்தவரென்று ரகசியப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து மேற்படி அமைச்சர் தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார் என்று கூறப்படுகிறது. [வி]

## எந்த இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செலுத்தியுள்ளோம். குடாநாட்டின் எந்தக்குச்சொழுங்கையால் எதிரி புறப்பட்டு வந்தாலும் வந்தவுடன் எதிர்க்கு பாடை கட்டும் பலத்துடன் புலிகள் பார்த்திருக்கின்றனர்.

"எதிரி எமது உயிரினும் மேலான உரிமைப்போரை பல்வழிகளில் திட்டமிட்டு அழிக்க முயல்கின்றான். பொய் வதந்திகளைப் பரப்பி போராளிகளின் மேல் "பிரியமின்மையை" ஏற்படுத்த அரசின் கைக்கூலிகளாக இங்கே செயற்படும் புல்லுருவிகள் முயன்று வருகின்றனர். "அங்கே இராணுவம் இறங்கி விட்டது" இங்கே இராணுவம் முன்னேறி வருகின்றது. புலிப்பொடியள் பின்வாங்கி விட்டார்கள்" என்ற மாதிரியான கதைகளை எங்கும் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இதன் பின்னணியில் ஒரு சதிகாரக் கும்பலே திட்டமிட்டபடி இயங்கி வருகின்றது. எனவே வதந்திகளை நம்பி ஒடித்திரிந்து உருக்குலைந்து அகதியாகி அலைந்து அல்லலுறாதீர்கள்.

குண்டு விழவிழக் குடியிருப்போம். வீடுஇடிந்து மேடாகட்டும். அதிலிருந்து நாங்கள் மூளை விடுவோம். நாங்கள் நெருப்பாற்றைக்கூட நீந்திக் கடக்கக் கூடியவர்கள் என்ற செய்தியை எதிரியின் செவிகளுக்குச் சொல்லிவைப்போம்.

உண்மைச் செய்திகளை நாங்கள் உங்களுக்கு உடனுக்குடன் அறியத்தருவோம். மண்டைதீவு வரையும் ஸ்ரீலங்கா இராணுவம் முன்னேறியது உண்மைதான். இராணுவ முக்கியத்துவம் இல்லாத பொட்டல் வெளியில் போராடி எங்கள் பலத்தை ஏன் இழக்க வேண்டும்? அங்கே எதிரியை எதிர்கொள்ள பலம் மிக்க கடற்படை ஒன்றைச் கட்டி எழுப்ப வேண்டும். கடற்புலிப்படை விரிவான பின்னரே கடல்சூழ் பிரதேசங்களில் நாம் எதிரியை எதிர்கொண்டு இலக்குவைக்க முடியும். எனவே இன்று கொஞ்சம் தள்ளிநின்று அவதானித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒன்றுக்கும் அஞ்சி நாங்கள் ஓடமுடியாது நிலையாக நின்றுகொண்டு எதிரியைச் சந்திக்கத் தயாராகுவோம்! அழிவுகள் எமக்குப் புதியவைகள் அல்ல. ஆனால் எமது அடுத்த தலைமுறையின் வாழ்விற்காகவாவது எமது பாதங்களைப் பலப்படுத்தி அந்தந்த இடங்களிலேயே நிமிர்ந்து நிற்போம் நிமிர்ந்து நிற்போம்.

## யாழ்ப்பாணம் கிளிநொச்சியில் தொடர்ந்து ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 'ஒப்பரேசன் வலம்புரி' தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் இது கிளிநொச்சி வரை விஸ்தரிக்கப் பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# இந்தியாவில் நிலநடுக்கம் 250 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் வடபகுதியில் நேற்று ஏற்பட்ட நில நடுக்கத்தில், 250க்கும் மேற்பட்டோர் பலியானதுடன், 2ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று அதிகாலை 2-55 மணியளவில் ஏற்பட்ட இத்திடீர் நில நடுக்கத்தினால் ஆழ்ந்த நித்திரையில் இருந்த பல மக்கள் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு இறந்துள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 200க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். [வி]

# யாழ். குடாநாட்டில் 3 நாட்களில் 1,50,000மக்கள் அகதிகளாக தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதி அகதிகள் பெருந்தொகையானோர் தென்மராட்சியில் தஞ்சமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 12,000 குடும்பங்கள் கொண்ட 70,000 மக்களும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2,000 குடும்பங்கள் கிட்டத்தட்ட 10,000 அகதிகளும், தீவுப் பகுதியில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு போன்ற இடங்களைச் சேர்ந்த 4,000 குடும்பங்களை சேர்ந்த ஏறக்குறைய 70,000 மக்களும் இடம்பெயர்ந்து அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் உணவுகள் வழங்கப்படுகின்றன.

இங்கு சுகாதார வசதிகள் குறைவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [152]

# அரச அதிகாரத்தை கைப்பற்றும் தாக்குதல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன், தீவிர தாக்குதல் முயற்சியில் அரசுப் படைகள் ஈடுபட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

'ஒப்பரேசன் வலம்புரி' யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டுவருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியில் உள்ள பழைய தபால்நிலையப் பகுதிகளை நோக்கி, நேற்று மாலை தீவுப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இப்பகுதி மக்கள் முன்கூட்டியே இடம்பெயர்ந்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை (வி)

## ஜெயலலிதாவுக்கு டாக்டர் பட்டம்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு டாக்டர் பட்டம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகம் இந்த பட்டத்தினை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

## சமாதானக்குழு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் கொழும்பு சென்று, புலிகளின் கருத்துக்களை அரசுக்குத் தெரிவிக்குள்ளனராம்.

இரு தரப்பினரதும் கருத்துக்களை அறிந்து முரண்பாடுகளைக் களைவதே தமது விஜயத்தின் நோக்கம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

## யாழ். நகரிலிருந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து யாழ். நகரில் தங்கியிருந்த அகதிகள் பலர் நேற்று முன்தினம் காலை யாழ். நகரில் நடைபெற்ற பொம்பர் ஹெலி தாக்குதல்களை தொடர்ந்து தென்மராட்சிப் பகுதிகளுக்கும் மீண்டும் இடம்பெயர்ந்துசென்றுள்ளனர். (153)


# தவறிவிட்டது!

16-10-91 பிற்பகல் 4-00 மணியளவில் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தியால் திரும்பி நல்லூர் பிள்ளையார் கோவில் வீதியினால் சென்று பத்திரகாளி கோயிலுக்குமிடையில்

★ மூக்குக்கண்டி ★ காசோலைப் புத்தகம்

★ முக்கிய திறப்புக் கோர்வையும்

அத்துடன்

★ ஒரு தொகைப் பணமும் கொண்ட

கைப்பை தவறிவிட்டது

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாக

திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள

குறிஞ்சி பார்மஸியில்

கையளிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(இ 5516)


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Lanka under License Number B/10326/81.